விலை ரூபா 4-50

# ஈழநாடு

## THE EELANADU
### NATIONAL TAMIL DAILY

மலர் 33 வைகாசி 29 துல்ஹஜ்ஜா 28 இதழ் 121
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12-06-1991

## இலங்கை இனப் பிரச்னைக்கு மாற்று அரசியல் தீர்வு

(கொழும்பு) அனைத்து கட்சி மாநாடு மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படாவிடின், அரசு மாற்று அரசியல் வழி ஒன்றை நாடவுள்ளதாக திரு. பிரட்மன் வீரக்கோன் தெரி (4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் முன்னேறும் முயற்சி புலிகளால் முறியடிப்பு

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மாவட்டத்தில் வெவ்வேறு மூன்று இராணுவ நிலைகளில் இருந்து முன்னேற முயன்ற (4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் 3 கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்கும்

(புதுடில்லி) இந்தியப் பொதுத் தேர்தல் மூலம், மத்தியில் இந்திரா காங்கிரஸ், தேசிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன [4ம் பக்கம் பார்க்க]



சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் தலைவர் பிரபாகரன் உரையாற்றுவதையும், மேடையில் தேசியவிருது பெறும் மாமனிதர்களில் சிலரையும் முதலாவது படத்திலும், தலைவர் வே. பிரபாகரன், கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதித் தலைவர் மாத்தயா, பேபி சுப்பிரமணியம், வே. பாலகுமாரன் ஆகியோர் வீற்றிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம் (படங்கள்: தேவா)

# ஐரோப்பிய நாட்டில் அரசுடன் பேச்சு நடத்த புலிகள் தயார்



வானைப்பிளக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் கரகோஷத்தின் மத்தியில் தலைவர் பிரபாகரன் சாவகச்சேரி முத்தமிழ் விழாவில் கரம் குவித்து மக்களிடம் விடைபெறுகிறார் அருகில் பிரதித் தலைவர் மாத்தயா, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் வீற்றிருப்பதையும் படத்தில் காணலாம்.

## லோறன்ஸ் திலகர் அறிவிப்பு

(பேர்லின்)

எவ்வித நிபந்தனைகளுமின்றி ஐரோப்பிய நாடொன்றில் வைத்து இலங்கை அரசுடன் நேரடியாக சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்க பேச்சாளர் லோறன்ஸ் திலகர் தெரிவித்தார்.

ஜெர்மனியிலிருந்து தொலைபேசி மூலம் ஏ. எவ். பி. செய்தியாளரிடம் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: இந்தியாவும் ஐரோப்பிய நாடுகளும் மத்தியஸ்தராக இருந்தால் மட்டுமே இப்பேச்சுவார்த்தை சாத்தியமாகும்.

### ஐ. நா. கண்காணிப்பு

புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெறும் போது ஐ. நா. சபை போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கலாம் என்றும் இலங்கை அரசுடனான போரை நிறுத்த தமது இயக்கம் கொண்டுள்ள நிலைப்பாடு இது என்றும் அவர் மேலும் கூறினர். (ரி)

## முக்கியத்துவம் வாய்ந்த சமாதான அழைப்பு

[கொழும்பு] புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடமாகும் இவ்வேளையில், புலிகளின் சமாதான அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

கடந்த வருடம் ஜூன் 11ம் திகதி புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்து, [4ம் பக்கம் பார்க்க]

### இலங்கை விடயத்தில்

## வேறுநாடுகள் தலையிடுவதனை இந்தியா விரும்பவில்லை

(புதுடில்லி) இலங்கை இனப் பிரச்சனையில் இந்தியா தவிர்ந்த வேறு நாடுகள் தலையிடுவதனை இந்தியா விரும்பவில்லை என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் வேறு நாடுகள் மத்தியஸ்தம் வகிப்பதற்கும் இந்தியா அனுமதிக்க மாட்டாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இருபகுதியினருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெறமாட்டாதென்றும் தெரியவருகிறது. (ரி)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

எம்மிடம் பழைய புதிய சினிமாப்பட வீடியோகசெட்டுகள் விற்பனைக்குண்டு. தி.பரமசிவன்பிள்ளை, மூத்ததம்பி வளவு, கரவெட்டி வடக்கு.
(சி-4831)

### தவறிவிட்டது

தீவகத்திலிருந்து 27-5-91ல் பண்ணைப்பாதையால் வரும்போது படகில் பிரயாணப்பை ஒன்று தவறிப்போய் விட்டது. அதில் உடுபிடவை முக்கிய ஆவணங்கள் இருப்பதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அறிவிக்கவும் ம. நடேசன், 383/10 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(சி- 4835)

### பாலாஜி புத்தகசாலை

பகவான் ஸ்ரீ சாயியுடன் தெய்வீகத்தை நோக்கி, விலை ரூபா 25/- மற்றும் பாடசாலை புத்தக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள, 27, மின்சாரநிலைய வீதி, 15/6 முதலாம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(ஏ-1368)

### சமூக நாவல்கள்

மீரா வெளியீடுகள்கதையில் கருத்தில் கன்னித்தமிழ் உரையாடல்களில் சிறந்த நாவல்கள் விற்பனையாகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, பிக்பென்ஸ் [B] புத்தகசாலை கிளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும்.
(சி-4840)


## இராசி பலன்

**12-06-1991**
**புதன்கிழமை**

அமாவாசை மாலை 6-35 வரை, ரோகினி நண்பகல் 12-01 வரை, இராகுகாலம் காலை 11-52 முதல் 1-22 வரை, சுபநேரம் மாலை 4-22 முதல் 5-22 வரை, அமாவாசை விரதம்.

மேடம்: துடுக்குத்தனம், வசைபாடுதல், தொழில் நஷ்டம்.

இடபம்: குடும்ப விவகாரம், மனமகிழ்ச்சி, புதிய உறவு.

மிதுனம்: மனவேதனை, அதிகாரிகள் சினம், தொழில் மாற்றம்.

கடகம்: ஆசாரக்குறைவு, தொழில் லாபம், கிரகப் பிரவேசம்.

சிங்கம்; கண்ணில் ரோகம், இனசனவரவு, வாக்குவன்மை.

கன்னி: குடும்பநிலை பாதிப்பு, உடல் உபாதை, மனக்குழப்பம்.

துலாம்: சோதனை மிகுதி, குடும்பச் செலவு, தொழில் விரோதம்.

விருச்சிகம்: உல்லாசப் பயணம், கற்பனை மிகுதி, குடும்பச் சுகம்.

தனுசு: நினைத்ததைச் சாதித்தல், காரியச் சித்தி, குடும்ப நன்மை.

மகரம்: வைத்தியச்செலவு, சகோதரர் பகை, தெய்வ வழிபாடு.

கும்பம்: அதிஷ்டவாய்ப்பின்மை, கடித பகை, அகால போசனம்.

மீனம்: போராட்ட சிந்தனை, கடன் வசதி, புத்திரர் சிறப்பு.

• ஜோஸ்யர்

# சுயதொழில் முயற்சிக்கு 5000 ரூபா கடன்

[சித்தன்கேணி]

காரைநகர் மத்தி மாதர் ஐக்கிய நாணய சங்கத்தினர் அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக ஒவ்வொருவருக்கும் ரூபா 5,000/- ஐ கடனுக வழங்கியுள்ளனர்.

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்திடமிருந்து ரூபா 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை காரைநகர் மத்தி மாதர் ஐக்கிய நாணய சங்கத்தினர் கடனுகப் பெற்று அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் சுயதொழில் முயற்சிக்கு கடனுக ரூபா 5000/-ஐ வழங்கியுள்ளனர்.

இருபத்திநான்கு அங்கத்தவர்கள் இந்தக்கடனைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

# பாடசாலை கிரிக்கெட்: கப்டன் இன்பசோதியின் சிறப்பான பந்து வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 6விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 197 ஓட்டங்களைப் பெற்றது. ஆர். நிர்மலன் (ஆட்டமிழக்காமல்) 53 திலிப்குமார்-33, பிரசாத்-32, மகேந்திரராசா-31, ஏ. ஐ. ஆர். இன்பசோதி-29 ஓட்டங்களைப் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டியின் காப்டன் ஏ. ஐ. ஆர். இன்பசோதி சிறப்பாகப் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவர் மொத்தம் 13 ஓவர்கள் பந்து வீசியதில் 7 ஓவர்கள் ஓட்டம் ஏதும் கொடுக்காத ஓவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி 2வது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவடையும்போது 7-விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தது எஸ். பிரபாகரன், மகேந்திரராசா ஆகியோர் முறையே மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள். இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

# மார்ச் மாதத்திற்குரிய மாணவர் உணவு முத்திரை வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதத்திற்குரிய யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர் மதிய உணவு முத்திரைகள், கடந்தவாரம் யாழ். செயலகத்தின் சமூக சேவைப் பிரிவிற்கு வந்துள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளிலிருந்து பிரிவு உதவி அரசாங்க அதிபர்களுக்கு மாணவர்களின் தொகையும், முத்திரைகளின் தொகையும் இதுவரை அறிவிக்காததால் இதை உடனடியாக விநியோகிக்க முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாடசாலை அதிபர்கள், தங்கள் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு, மேற்படி தகவல்களை அளித்தால் மதிய உணவு முத்திரைகள் விநியோகிக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (153, 71)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்சழக பட்டமளிப்பு விழாவில் 497 பேர் நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறவிருக்கிறுர்கள்.

ஜூலை மாதம் 6-ந் திகதி காலை மேற்படி பட்டமளிப்பு விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெறவிருக்கிறது.

சித்த மருத்துவ பிரிவைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்களுக்கு முதன்முறையாக் அன்றையதினம் பட்டம் வழங்கப்படவிருக்கிறது. (153)

## அல்லைப்பிட்டியில் அலுவலகம்

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்பொழுது அல்லைப்பிட்டியில் உள்ள தனியார் கட்டிடமொன்றில் இயங்குகின்றது.

இந்த அலுவலகம் தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சில வாரங்கள் யாழ். செயலகத்தில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (71]

## நன்கொடைப் பணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலக எல்லைக்குள் இருக்கும் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப்பணம் மல்லாகத்திலுள்ள அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.

1990ம் ஆண்டு வரையான இப்பணத்தினைப் பெற்றுக் கொள்ளாத மேற்படி பிரிவுச் சனசமூக நிலையங்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு பொறுப்பதிகாரி திரு. செ. அன்னராசா கேட்டுள்ளார்.

# சமூக சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

[மானிப்பாய்]

சமூகசேவை உத்தியோகத்தர் பதவி தரம் IIக்கான விண்ணம்பங்கள் 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அரசாங்க சேவையிலிருந்து கொண்டு விண்ணப்பிப்பவர்களுக்கு தாபனக்கோவை பகுதி 11-ல், 12-ல் 5ம் பந்தியும், 12-ல் 13ம் பந்தியும், குறிப்பிட்டவாறு விதிவிலக்களிக்கப் பட்டுள்ளது;

இதற்கான மாதிரி விண்ணப்ப படிவமும் விபரங்களும் யாழ் செயலகத்திலுள்ள விளம்பரப்பலகையில் வைக்கப்பட்டுள்ளது.

முழு விபரங்களுக்கும் 91 ஏப்ரல் 24ம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். [71]

## பரீட்சை விண்ணபபங்கள்

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் சேவையின் IIஆம் வகுப்பின் ''அ'' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சை அரசாங்க சேவை அதிகார சபையின் அங்கீகாரத்தின்படி பரீட்சை ஆணையாளரால் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய இடங்களில் ஆகஸ்ட் மாதம் 31ந் திகதி நடைபெறவிருக்கிறது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள், இம்மாதம் 21ந் திகதிக்குப் பிந்தாமல், திணைக்களத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது (153)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்க ஆதரவில் திரு. கே எஸ். குகதாசன் 14ம் திகதி பி. ப. 3 30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பௌதீகவியல்விரிவுரைமண்டபத்தில் ''கடல் நீர் வாழ் உயிரியலின் எதிர்கால வாய்ப்புகள்'' என்ற தலைப்பில் ஒரு கருத்துரை வழங்குவார்.

திரு. கே. எஸ். குகதாசன் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னை நாள் அதிபரும், கடல் நீர் உயிரினங்களைப் பற்றிய ஆய்வுகளையும் நடாத்தி முதுமானிப் பட்டம் பெற்றவருமாவார்.

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் கருத்தரங்குத் தொடர் 2ல் 'யாழ்ப்பாணக் குடாநாட்டின் உருவவியல்' எனும் தலைப்பில் திரு. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் [சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்துறை] இன்று புதன் கிழமை பி. ப. 3-00மணியளவில் புவியியல் விரிவுரை மண்டபத்தில் சிறப்புரையாற்றுவார்.

## கடும்காற்று பயணிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது வடபகுதியில் வீசும் கடும்காற்றினுல் சைக்கிளில் பயணம் செய்யும் பிரயாணிகள் பெரும் அவதியுறுகின்றனர்.

வழமையை விட இக்காற்று பலமாக வீசுவதாகவும் இதனுல் வாழை போன்ற பயிர்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புள்ளிவிபரக் கைநூல்

(யாழ்ப்பாணம்)

1990ம் ஆண்டுக்கான யாழ் மாவட்டபுள்ளிவிபரக்கைநூல் கடந்தவாரம் வெளியாகியுள்ளது.

யாழ். மாவட்ட புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. து. விஜயசிங்கத்தின் அறிவுறுத்தல் மேற்பார்வையின் கீழ் யாழ். புள்ளிவிபரக்கிளையினுல் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

1989ம் ஆண்டு புள்ளிவிபரக் கைநூலை விட இதில் கூடுதலான விபரங்கள் இம்முறை சேர்க்கப்பட்டுள்ளது.

86 அட்டவணையில் யாழ். மாவட்ட புள்ளி விபரங்கள் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளது. (153)

# அரிசி, மா, சீனி மாணவர்க்கு வழங்கப்படும்

[சித்தன்கேணி]

மாணவர் மதியபோசன உணவு முத்திரைகளுக்கு உலர் உணவு விநியோகத்தின்போது வழங்கப்படும் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மாணவர் மதியபோசன உணவுமுத்திரைத் திட்டம் அமுலுக்கு வந்தபின்பு இதுவரை உள்ளூர் உற்பத்திப் பொருட்களான பயறு, உழுந்து, கௌப்பி போன்ற தானிய உணவுப் பொருட்களே கூடுதலாக வழங்கப்பட்டு வந்தன.

இனிமேல் வழங்கப்படவுள்ள மாணவர் மதியபோசன உணவு முத்திரைகளுக்கு அரிசி மா, சீனி போன்ற உணவுப் பொருள்கள்வழங்கப்படவுள்ளதாக யாழ் அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (137)

## கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட உணவு விநியோகம், உணவு உற்பத்தி சம்பந்தமான கூட்டம் 14-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் யாழ் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது. [153)

# உணவு, எரிபொருள், உரம் தருவிக்க முயற்சி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய அரச அதிபர் திரு. பொன்னம்பலம் பதவிஏற்றபின்முதல் நடவடிக்கையாக உணவு எரிபொருள், உரவகைகளை தருவிக்க துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

கப்பல்மூலம் கொண்டுவரப்பட்டு யாழ் மாவட்டத்தில் இறக்கப்பட்டுள்ள கிளிநொச்சிக்கான உரம், எரிபொருள் முதலானவற்றையும் லொறிகள்மூலம் கிளிநொச்சிக்குக் கொண்டுவரவும் அரச அதிபர் திரு. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சிக்கு லொறிவாகனத்தொகுதி ஒன்றும்உணவுப் பொருட்களுடன் வந்துள்ளது. இவை கூட்டுறவுச் சங்க லொறிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. [83)

## உதவி ஆணையாளர்

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையாளராக திருமதி திலகநாயகம் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு யாழ். சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு நிலையத்தின் உதவி ஆணையாளராகப்பணிபுரிந்தவர். (71)

Chundikuli Branch Library

## நயினேயுறை நாகேஸ்வரியே

அந்தமிலாப் பெருமையினை அறிந்தேன் அம்மா
அகங்குளிர உருகியுள்ளம் களித்தே நின்றேன்
பங்கமிலாப் பெருவாழ்வு பெறவே வேண்டி
பக்தியுடன் உனைத்தினமும் தொழுதேன்
அம்மா

தங்குதடை ஏதும் இன்றி அருள்தனைத்தந்த
தரணிபோற்றும் நயினையுறை நாகேஸ்வரியே
ஓங்கிடும் உன்பாதம்தனை நம்பிநாடி
பூமாலை நிதம்சூட்ட அருள் நாகம்மா.

-நயினை கி. கிருபானந்தா

(இன்று நயினாதீவு ஸ்ரீநாகபூஷனி அம்மன் கொடியேற்றம்)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 17ம் திகதி திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்துபத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

25ம் திகதி செவ்வாய்க் கிழமை இரதோற்சவமும் 26ந் திகதி புதன்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெற்று 27ந் திகதி வியாழக்கிழமை பூங்காவனத்திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

# ராஜீவ் கொலைசெய்யப்பட்டது

## இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்

### — சுப்பிரமணியம் சுவாமி

(புதுடில்லி)

''வெளிநாட்டைச் சேர்ந்த எந்தவொரு அமைப்பும் உள் நாட்டு சக்திகளுடன் சேர்ந்து கொண்டு நமது தலைவர்களை கொலைசெய்வது இந்திய தேசத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாகும்''

சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் மேறகண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எந்தவொரு வெளிநாட்டுச் சக்தியெதுவும் நமது நாட்டவரை தாக்குமேயானல் அச் சக்திமீது நடவடிக்கை யடுக்க இந்தியாவுக்கு உரிமையுண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீபெரம்புத்தூரில் ராஜீவுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றும் காவல்துறையினரை குறைகூறுவது சரியல்லவென்றும் அவர் தெரிவித்தார். (க)

## கலைஞர் மீது

## தொடர்ந்து தாக்கு

(சென்னை)

கலைஞர் மு. கருணாநிதிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல தடவைகள் இரகசிய பேச்சுக்கள் நடந்துள்ளன என்றும் இது தொடர்பான தகவல்கள் மத்திய அரசிடம் இருப்பதாகவும் இந்திய சட்டத்துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியசுவாமிதெரிவித்துள்ளார்.

ராஜீவின் கொலை, பத்மநாபாவும் அவர் தோழர்களும் கொலை செய்யப்பட்டதன் தொடர்ச்சியே என்றும் அப்போதைய தி. மு. க. அரசு கொலையாளிகளை தப்பிக்க வைத்ததாகவும் கூறினர்.

வெளிநாட்டு அமைப்புகள் தம் இஷ்டப்படி யாரையும் கொல்லலாமென்றுல் அதனைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. இம்மாதிரி பிரச்னைகளில் மற்றநாடுகள் என்ன நடவடிக்கை எடுக்குமோ அதையே நாமும் எடுக்கவேண்டும் என்ருர். (சி)

'சண்டே மெயில்' கருத்துக் கணிப்பு:

## இந்திரா காங்கிரஸுக்கு 212 இடங்கள் கிடைக்கும்

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து இந்தியாவின் 'சண்டேமெயில்' என்னும் பத்திரிகை கருத்துக் கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி காங்கிரஸ்கட்சி 185 முதல் 212 இடங்களைக் கைப்பற்றுமெனவும், தேசிய முன்னணியும் கம்யூனிஸக்கட்சிகளும் 146 முதல் 175 இடங்களைக் கைப்பற்றுமெனவும், பாரதீயஜன தாக்கட்சி 115 முதல் 147 இடங்களைக் கைப்பற்றுமெனவும் இப்பத்திரிகை தனது கணிப்பில் தெரிவித்துள்ளது. [க]

## காஷ்மீர் எல்லையில் மோதல்

(புதுடில்லி)

காஷ்மீர் எல்லையில் கடந்த சில தினங்களுக்கு முன் இந்திய - பாகிஸ்தான் படைகளிடையே பல மணி நேரம் கடும் மோதல் இடம் பெற்றது. இம் மோதலில் 10 படையினர் கொல்லப்பட்டனர்.

எல்லையில் காவலில் ஈடுபட்ட படையினரிடையே இம் மோதல் இடம் பெற்றது. இதில் 4 இந்திய படையினரும் 6 பாகிஸ்தான் படையினரும் கொல்லப்பட்டனராம்.

கடந்த 3 மாதங்களில் இந்த எல்லைப் பகுதியில் நான்காவது தடமையாக இக்கடும் மோதல் இடம் பெற்றுள்ளது (சி]

## அ. தி. மு. க. கொடியை திருநாவுக்கரசு அணி பயன்படுத்த தடை

[சென்னை]

அ.தி.மு.க.வின் கொடியை அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற திருநாவுக்கரசு அணியினர் பயன்படுத்தக்கூடாது என்று சென்னை நகர அவிட் நீதிமன்றம் கூறியுள்ளது,

தாங்களும் அ.தி மு க. வினர்தான் என்ற இந்த அணியினரின் கோரிக்கையை இந்திய தேர்தல் தலைமையகம் ஏற்கனவே நிராகரித்திருந்தது தெரிந்ததே.

தற்போது இக்குழுவினர் அக்கட்சியின் கொடியையும் பயன்படுத்தக்கூடாது என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது திருநாவுக்கரசு அணியினர் அண்ணு புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் தி. மு. க.வுடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் 9 தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

## உதவிப் பணம் மீண்டும் தபாலகங்கள் மூலம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சமூக சேவை பகுதியின் பொது சன உதவிப் பணம் பெறுபவர்களின் உதவிப்பணம் மீண்டும் அந்தந்த தபாலகங்கள் மூலம் இந்த மாதம் தொடக்கம் வழங்கப்படவிருக்கிறது.

கடந்த பதினெரு மாதங்களாக இப்பணம் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் மூலமாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.(153)

## பாம்புக் கடிக்கு பலர் இலக்காயினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையில் யூன் முதலாம் திகதியிலிருந்து 10ம் திகதி வரையில் தினமும் பாம்புக்கடிக்குள்ளாகி பலர் தீவிர சிகிச்சைப் பகுதியி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

பதினெருபேர் பாம்புக் கடிக்கு இலக்காகியும், மற்றும் இருவர் வேறு விசக் கடிக்கு இலக்காகியும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களில் 50க்கும் மேற்பட்டோர் பாம்புக்கடிக்கும், விஷகடிக்கும் உள்ளாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [56]

## முத்தமிழைக் காப்போம்

சங்கத் தமர்ந்த தமிழ்மகளால் சிங்களரால்
இங்குற்ற இன்னல் களைந்திடுவோம்—
பொங்கியெமை
எத்தனைதான் துன்பங்கள் சூழ்ந்திடினும்
ஏற்றியெம்
முத்தமிழைக் காப்போம் முனைந்து.

-'தமிழ்வண்ணன்'


விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

## முத்தமிழ் விழா

### 7-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: நெல்லியடி
'மாவீரர் கலையரங்கம்'

நாள்: 12-06-1991 புதன்கிழமை
பிற்பகல் 5-30 மணி

5-30 — 6-15 மங்கள இசை

நாதஸ்வரம்: திரு. பி. எஸ். பிச்சையப்பா, திரு. பி. ரஜீந்திரன்
தவில்: திரு. பி. ரவீந்திரன், திரு. எஸ். ராமு

விடுதலைப்புலிகளின் திறப்புரை

சிறப்புரை: கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

வழக்காடு மன்றம்

பொருள்: பாரதியின் கனவை நனவாக்கத் தவறிய காரணத்தால் குற்றவாளிக் கூண்டில் ஈழத்தமிழர்கள்

நீதிபதிகள்: வித்துவான் சி. குமாரசாமி
திரு. இ. ஜெயராஜ்
புலவர் ஈழத்துச்சிவானந்தன்

தொடுப்பவர்கள்: திரு. ரி. சிவகுமாரன், திரு. திருநந்தகுமார்
மறுப்பவர்கள்: திரு. பொன். கணேசமூர்த்தி, திரு. வேலாயுதம்

இசைக்கச்சேரி:

திரு. எஸ். குமாரசாமி — பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் — வயலின்
செல்வன் கே. துரைராஜா — மிருதங்கம்
திரு. எஸ். வேல்மாறன் — கடம்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடாத்திய மாவீரர் நாள் இலக்கியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு

உசன் மாணவர் அமைப்பினர் வழங்கும்
'மீண்டும் எழுவோம்' — நாடகம்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும்
'நாளை விடியும்' — நாடகம்


## பலதும் பத்தும்

### சிங்களவரை காணமுடியாத திருமலை!!

1898ல் திருகோணமலையில் உதவி அரசாங்க முகவராக இருந்த சி. எம். லுசிங்ரன் இலங்கையில் தாம் இருந்தபோது 'இலங்கையில் மகிழ்ச்சியான நாட்கள்' என்னும் நூலில் இவ்வாறு கூறுகிருர்

''இலங்கைக்கு வரும் ஒருவர் ஓர் ஆண்டுக்கு ஒரு சிங்கள மனிதனைச் சந்திக்காது இலங்கையில் எந்தப் பகுதியிலாவது இருக்கமுடியுமா'' என்பது நம்பமுடியாததொன்ருகும் ஆனல் திருமலைக்கு வரும் ஒருபார்வையாளருக்கு இந்நிலை ஏற்படலாம். இலங்கையில் சிங்கள மக்கள் அதிகமாக இருந்தாலும், எந்தவொரு பட்டணத்திலாவது சிங்கள மொழி பேசும் ஒருவரையாவது காணமல் இருப்பது நம்பமுடியாத நிகழ்ச்சி என்றும் திருகோணமலையைப் பொறுத்தவரை இது உண்மையாகும் என்று கூறியுள்ளார்.

— ஞாநி

## மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை அருள்மிகு கண்ணகாம்பிகாதேவி சமேத கண்ணலிங்கேஸ்வரர் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 10-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மஹோற்சவம் எதிர்வரும் 19-ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

## 400 புதிய பஸ் வண்டிகள்

[கொழும்பு]

இவ்வருடம் 400 புதிய பஸ் வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

15 ஆயிரம் தனியார் பஸ் வண்டிகள் தற்போது சேவையில் உள்ளதாகவும் 3,000 பஸ் வண்டிகள் கடந்த 3வருடகாலத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)



தலைவர் பிரபாகரனிடமிருந்து தமிழீழ தேசிய விருதுகள் பெறும் திருநாவுக்கரசு, அருணாசலத்தின் மகன், திருமதி இராசரத்தினம் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

# கைதான 24 பேரும் நயினையில் விடுதலை

(வேலணை)

எழுவைதீவில் கடந்த 5ம் திகதி சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள் 24 பேரையும் காரைநகர் கடற்படையினர் நயினாதீவில் வைத்து விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத் தினத்தன்று இரவு கைதுசெய்யப்பட்ட நபர்கள், எழுவைதீவுக் கடற்கரைப் பகுதியிலுள்ள மரணவீடொன்டில் உணவு சமைத்துக்கொண்டிருந்த சமயம் ஊர்காவற்றுறையில் தங்கியிருந்த இராணுவத்தினர் இரவோடு இரவாக அவ்விடத்திற்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து கடற்படையினரிடம் ஒப்படைத்தனராம்.

விசாரணையின் பின் நேற்று முன்தினம் நயினாதீவுக் கடற்படையினரிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (75)

ஐ. நா. உயர் ஸ்தானிகராலய

# வாகனம் மீது மன்னாரில் இராணுவம் தாக்குதல்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய வாகனம் ஒன்று நேற்று சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

மன்னார் மடுவிலுள்ள அகதி முகாமிற்கு உணவுப்பொருள் எடுத்துச்சென்ற வாகனங்கள் ஒன்றே இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்கானது.

இந்த வாகனத்தில் ஐ நா. உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் பயணம் செய்தபோதும் அவர்கள் தெய்வாதீனமாக காயம் எதுவுமின்றி தப்பிய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கையிலுள்ள ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பூ)

# வேட்பாளர் தற்கொலை தேர்தல் ரத்து

(சென்னை)

தமிழகத்தில் முசிறி சட்டசபை தொகுதியில் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் தற்கொலை செய்ததையடுத்து அங்கு தேர்தல் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

சுயேட்சையாக போட்டியிடும் என். நல்லுச்சாமி என்ற வேட்பாளர், கடன் தொல்லையால் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவராவார்.

இதையடுத்தே இத்தொகுதிக்கான தேர்தல் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. சி

# 2ம் கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெறும்

(புதுடில்லி)

இந்தியாவின் 13 மாநிலங்களிலிருந்தும் 2 யூனியன் பிரதேசங்களிலிருந்தும் 114 மக்களவைத்தொகுதிகட்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறுகின்றன.

அத்தோடு கேரள மாநிலத்தில் 139 சட்டப்பேரவைக்கான தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகின்றன.

10 கோடிக்கு மேலான வாக்காளர்கள் இன்று வாக்களிக்கவுள்ளனர்.

முதல்கட்ட வாக்குப்பதிவு சென்ற மாதம் 20ம் திகதி நடைபெற்றது.

கடந்த மாதம் 23ம், 26ம் திகதிகளில் நடைபெற வேண்டிய வாக்குப்பதிவு திரு. ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து பிற்போடப்பட்டது தெரிந்ததே.

தற்போது 2ம் கட்ட வாக்குப்பதிவு கடுமையான பந்தோபஸ்து ஏற்பாடுகளுடன் நடைபெறுகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை தமிழ்நாட்டில் 3ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளன. (பூ

## முக்கியத்துவம்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

போர் தொடங்கி ஒரு வருடம் நிறைவு பெறுகிறது. இவ்வேளையில் புலிகளின் சமாதான அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றெனக் கருதப்படுகிறது. (ரி)

## இராணுவம்

(1ம் பக்கத் தொட ச்சி)

சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்கித் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

செங்கலடி, கரடியனாறு ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பகல் 12-00 மணியளவில் முன்னேற முயன்றபோது, விடுதலைப் புலிகள் மயிலவெட்டுவான் என்ற இடத்தில் வைத்துத் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலினால் முன்னேற முடியாத இராணுவத்தினர், மயிலவெட்டுவானில் நிலைகொண்டுள்ளனர்.

இதே தினம் புலிபாய்ந்தகல் என்ற இடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து முன்னேறி வடிகல் பகுதிக்கு வந்தபோது விடுதலைப் புலிகள் தாக்கி அவர்களின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

வாகனேரி இராணுவ முகாமில் இருந்தும் நேற்று முன்தினம் பகல் 11-30 மணியளவில் வெளியேறி, முறிகானைப் பகுதிக்கு முன்னேறி வந்த இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர். (பூ)

## சிற்ப, ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடத்தும் முத்தமிழ் விழாவையொட்டி இன்று தொடக்கம் இம்மாதம் 15-ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் சிற்ப ஓவியக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில இக்கண்காட்சி நடைபெறும்.

சமகால நிகழ்வுகளையும் விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் ஓவியர்கள், சிற்பங்கள் மரபு ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் இக்கண்காட்சியில் இடம் பெறவுள்ளன.

# ராஜீவ் கொலை தொடர்பாக இரு ஈழத் தமிழர் கைது

[புதுடில்லி]

ராஜீவ் கொலை வழக்கு சம்பந்தமாக மேலும் இரு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் கேரள மாலத்திலும் மற்றவர் சென்னை விமான நிலையத்திலும் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

## ஊரடங்கு உத்தரவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மூன்று அரசாங்க அதிபர் பிரிவுகளில் நேற்றிலிருந்து காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (பூ)

## வெள்ளைப் பிரம்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

முப்பத்தைந்து கண்பார்வையற்றவர்களுக்கு அறவழிப் போராட்டக்குழுவினால் இன்று வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்படவுள்ளன.

அறவழிப்பணிமனையில் தலைவர் கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இன்று காலை நடைபெறும் வெள்ளைப்பிரம்பு வழங்கும் வைபவத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எம். பத்திநாதர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## இந்தியா ப ல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து ஆட்சியமைக்கும் சாத்தியம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துவருவதை அடுத்தே மேற்படி 3 கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைக்க முயலுமெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரதீய ஜனதா ஆட்சி அமைப்பதைத் தடுக்க இம்மூன்று கட்சிகளும் முனைந்து வருகின்றனவாம். (சி)

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளின் இறுதி மாநாடு 24ம் திகதி நடைபெறும். இதற்கு முன் இம்மாநாடு மூலம் பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண முயல்கிறதாம்.

எனினும் இது தோல்வியுறும் பட்சத்தில் மாற்றுவழியொயன்றின் மூலம் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண அரசு முயலுமென்றும் தமிழ்-சிங்கள மொழியாக அமுல் படுத்துவது தொடர்பாக கண்காணிப்பு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரட்மன் தெரிவித்தார். (சி)


# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் ரேட், கோண்டாவில்.

## புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

5ம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி 2வது பரீட்சை 16-6-91 ஞாயிறு பி. ப. 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விபரங்களுக்கு:

எ-1371 நிர்வாகி.



# கண்ணீர் அஞ்சலி

## திருமதி திலகவதி இராசரத்தினம்

(யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியையும் எமது பிரியத்திற்குரிய நண்பியுமாகிய திருமதி திலகவதி இராசரத்தினம் அவர்களின் சடுதியான மரணம் (11-06-91) கல்வியுலகிற்குப் பெரும்இழப்பாகும். இறுதி மூச்சுவரை தன்கடமையில் கண்ணியமாகத் தொண்டாற்றிய அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலி உரித்தாகுக.

அதிபர், ஆசிரியைகள்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி.

(எ-1372)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number [illegible]